**கல்முனை மாநகர சபை - 2022**

**---------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

கல்முனை மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்தவில்லை. இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றிற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் மறுப்பு அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) மாநகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசானது சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்கான தற்காலிக ஊழியர்கள் சம்பளம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவை தொடர்பில் செலுத்தவேண்டிய ரூபா 2,991,047 தொகை பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | EPF, ETF தொடர்பாக இனிவரும் காலங்களில் சீர்செய்யப்படும். | கணக்குகளை சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த வாகனத் திருத்தச் செலவு, மேலதிக நேரப் படி, பத்திரிகைக் கொள்வனவு மற்றும் வாகன உதிரிப்பாக கொள்வனவு என்பவற்றின் பெறுமதி ரூபா 3,909,502 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் அவற்றைக் கோரிப் பெற்றேனும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (இ) | உள்ளூராட்சி திணைக்களத்தினால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மாநகர சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 07 பொருட்களின் பெறுமதி ரூபா 303,104 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நன்கொடையாக கிடைக்கப் பெற்ற பொருட்களின் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த அண்டில் நன்கொடையாக கிடைக்கப் பெறும் பொருட்களின் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | ------------ | ----------- | ------------------- | ------------------ | ----------------- |
| | | ரூபா | | | |
| (அ) | (i) காணிகட்டிடங்கள் | 701,271,237 | காணி உறுதி | இது தொடர்பான தகவல்களை பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இவை பூரணப்படுத்தப்பட்டதும் அறிக்கை செய்யப்படும். | மிக விரைவாக தகவல்களை பெற்று உரிய ஏடுகளை முறைப்படி பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) பொறித் தொகுதியும் இயந்திரமும்<br>(iii) மோட்டார் வாகனங்களும் வண்டிகளும்<br>(iv) தளபாடங்களும் பொருத்துகளும்<br>(v) அலுவலக உபகரணங்கள் | | நிலையான சொத்துப் பதிவேடு | | |
| | (vi) வீதிகள் | | வீதிப் பதிவேடு | | |
| | (vii) அரசிறைக் கடனாளிகள் | | நிலுவைகளின் பட்டியல் மற்றும் காலப்பகுப்பாய்வு | | |
| | (viii) முற்கொடுப்பனவு | | முற்கொடுப்பனவு பதிவேடு | | |
| | (ix) செலுத்தப்படாத வழங்குபொருள் மின்சாரம் | | பதிவேடு | | |
| (ஆ) | மீளளிக்கத்தக்க வைப்பு மீதி | 32,954,838 | விபரமான வகைப்படுத்தப் பட்ட பட்டியல் மற்றும் காலப்பகுப்பாய்வு | வைப்புப் பணங்களின் பகுப்பாய்வு தற்போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. | விபரமான வகைப்படுத்தப் பட்ட பகுப்பாய்வு அறிக்கை மற்றும் அதன் காலப்பகுப்பாய்வினை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | (i) வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்<br>(ii) திண்மக்கழி வகற்றல் வரி<br>(iii) வாடகை<br>(iv) வீதவரியும்வரியும்<br>(v) ஏனைய வருமானம்<br>(vi) விளம்பரக் கட்டணம்<br>(vii) விலங்கறுமனைக் கட்டணம் | 637,798,571 | நிலுவை வருமானங்களின் விபரமான பட்டியல் மற்றும் அவற்றிற்கான கட்டுப்பாட்டுக் கணக்குகள் | மாநகர சபையில் பயன்படுத்தப்பட்ட மென்பொருட்களின் குறைபாடுகளே இவற்றிற்கு காரணமாகும். அதனை சீர் செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | (i) மின்சாரகருமங்கள் களஞ்சிய பொருட்கள்<br>(ii) ஊழியர் கடன்<br>(iii) அரசிறைக் கடனாளிகள்<br>(iv) மீளளிக்கப்படற் பாலாதான வைப்புப்பணங்கள்<br>(v) செலுத்தவேண்டிய டிப்பிங்<br>(vi) திரண்ட நிதி (மாநகர நிதி) | 59,560,540 | நிலுவை வருமானங்களின் விபரமான பட்டியல் மற்றும் அவற்றிற்கான கட்டுப்பாட்டுக் கணக்குகள் | குறித்த வேறுபாட்டினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விரிவான அட்டவணை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 252 இன் 155 பிரிவு | மாநகர சபைக்குச் சொந்தமான கல்முனை பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள 587 கடையறைகளுக்கு அறவிடப்படும் வாடகைத் தொகையினை காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்து வாடகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சில கடையறைகளுக்கான வாடகைகள் அதிகரிக்கப்பட்டு புதிய ஒப்பந்தங்களும் செய்யப்பட்டுள்ளது. ஏனைய கடையறைகளுக்கும் ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்டு வாடகையினை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், கடைகளுக்கு அறவிடப்படும் வாடகைத் தொகையினை காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கிழக்கு மாகாண பிரதம செயலாளரது EP/01/CMA/ Cabinet.Memo/007 இலக்க 2020.07.10 திகதிய கடிதம் | ஆதனவரி அறவிடுவதற்காக மாநகர சபையின் அதிகார பிரதேசத்திலுள்ள அசையாத ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்தும் 2011/2012 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட 46,303 எண்ணிக்கையிலான மொத்த ஆதனவரி அலகுகளினை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | தற்போது புதிதாக மதிப்பீடு செய்வதற்கு விண்ணப்பித்து தரவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் குறித்த மதிப்பீட்டை பொதுச் சபையே செய்திருக்க வேண்டும். | கடிதத்தின் பிரகாரம், அசையாத ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய PT/03/2021 ஆம் இலக்க கிழக்கு மாகாண நிதிச் சுற்றறிக்கை | பணம், களஞ்சிய பொருட்கள், அரசிறை அறவீடுகள் மற்றும் காசோலையில் கையொப்பமிடல் போன்ற கடமைகளுக்கு பொறுப்பாக்கப்பட்ட 10 உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 107,500 தொகையான பாதுகாப்பு பிணை மாநகர சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த விடயம் தொடர்பாக சகல பதவி உத்தியோகத்தர்கள், நிதி சார்ந்த சொத்துக்கள் தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம், உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து பாதுகாப்பு பிணையினை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 59,202,514 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 5,123,295 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2021 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2021 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 51,730,000 | 168,405,120 | 25,401,677 | 143,003,442 | 297,110,000 | 130,490,677 | 14,748,476 | 115,742,203 |
| (ii) | வாடகை | 24,754,000 | 81,586,027 | 26,982,674 | 54,603,351 | 30,444,000 | 64,823,698 | 12,286,390 | 52,537,308 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 28,310,000 | 8,283,618 | 8,283,618 | - | 28,305,000 | 7,635,000 | 7,635,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 67,765,000 | 14,483,818 | 14,483,818 | - | 54,160,000 | 39,000,000 | 39,000,000 | - |
| (v) | கூட்டுத் தொகை | **172,559,000** | **272,758,583** | **75,151,787** | **197,606,793** | **410,019,000** | **241,949,375** | **73,669,866** | **168,279,511** |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பெறவேண்டிய ரூபா 272,758,583 மொத்த வரி வருமானத்தில் அறவிடப்பட்ட வரி வருமானமாக ரூபா 75,151,787 தொகை காணப்பட்டிருந்தது. இது அறவிடவேண்டிய வருமானத்தின் 27 சதவீதமாக காணப்பட்டதுடன் இது மாநகர சபையின் வருமான நிர்வாக | நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று மற்றும் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக வரிப்பணம் அறவிடுவதில் பாரிய சிரமம் ஏற்பட்டதனால் குறைவான வருமானம் | அறவிட வேண்டிய நிலுவை வருமானங்களை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவத்தின் பலவீனத்தை வெளிப்படுத்துகின்றது. | பெறப்பட்டது. எதிர்வரும் காலங்களில் சீர் செய்யப்படும். | |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | கல்முனை பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள கடையறைகளினை வாடகைக்கு வழங்கியமை தொடர்பில் 587 வாடகைதாரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 19,050,885 தொகையினை 5 வருடங்களிற்கு மேலாக அறவிடுவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடத்திற்கு 3 தடவை கடிதங்கள் அனுப்பப்படுவதோடு வருமானப் பரிசோதகரினால் நிலுவைகள் அறவிடப்பட்டு வருகின்றது. இப்பொழுது நிலுவைகள் குறைவாகவே காணப்படுகின்றது. | மேற்படி |
| (ii) | சபையின் அரச பேருந்து தரிப்பிட நிலையத்திற்கான 02 கடையறைகளினை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வாடகைக்கு வழங்கியமை தொடர்பில் அச் சபையிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை ரூபா 1,450,000 தொகையினை 05 வருடங்களுக்கு மேலாக அறவிடுவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் கடையறைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந் நிலுவைகளை இதன் மூலம் பெற்றுக்கொள்ள ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய வருமானங்களை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் திண்மக்கழிவகற்றல் வரி ரூபா 7,200,000 தொகை பாதிடப்பட்டு, அவற்றில் ரூபா 4,441,373 தொகையே அறவிடப்பட்டிருந்தது. மேலும், இவ் அறவீடு தொடர்பில் விபரமான பட்டியல் மற்றும் பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டின் பொருளாதார வீழ்ச்சியின் நிமிர்த்தம் பொது மக்களிடம் வரி அறவீடு செய்வது மிகவும் சிரமமாகக் காணப்பட்டதனால் குறைவான வருமானத்தையே அறவிடு செய்ய முடிந்தது. | உரிய முறையில் ஏடுகள் பேணப்பட்டு வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| வருமான சேகரிப்பிற்காக 2020 ஜனவரி 01 ஆந் திகதியிலிருந்து பயன்படுத்தப்பட்டு வரும் கணினி மையப்படுத்தப்பட்ட வருமான மென்முறைமையானது பெறுகை நடைமுறை பின்பற்றப்படாமல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் உள்ளக கட்டுப்பாடு மற்றும் உள்ளக கணக்காய்வின்மை போன்றவற்றின் காரணமாக நாளாந்தம் அறவிடப்பட்ட வருமானங்கள் முழுமையாக மாநகர சபையின் கணக்குகளுக்கு வைப்புச் செய்யப்படாமல் 9 வகையான வருமான மூலங்களிலிருந்து அறவீடு செய்யப்பட்டிருந்த சுமார் ரூபா 18,094,795 | வழக்கு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் அதற்கான முடிவு கிடைக்கும் வரை மாநகர சபைக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பான ஆவணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியவில்லை. | குறித்த மென்முறைமையானது அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு, பொறுப்பு வாய்ந்த தகுதியான உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி, முறையாக பதிவேடுகளை பேணுவதுடன், மோசடிக்கு வழிவகுத்த தரப்பினர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | தொகை வைப்புச் செய்யப்படாமல் மோசடி செய்யப்பட்டிருந்தது. | | எடுத்து, இவ் இழப்பை அவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கிராம அபிவிருத்தி வங்கியில் நிலையான வைப்பாக ரூபா 32 மில்லியன் தொகை 2018 திசெம்பர் 10 ஆந் திகதி முதல் 2019 திசெம்பர் 10 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 12.5% வட்டியில் வைப்பிலிடப்பட்டிருந்த வைப்பானது முதிர்ச்சியடைந்திருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டு இறுதி வரை சபைத் தீர்மானமின்றி தொடர்ச்சியாக புதுப்பிக்கப்படாமல் வைப்பில் இடப்பட்டிருந்தது. இருப்பினும், 2022 ஆண்டில் சந்தை வட்டி வீதம் 20% முதல் 24% வரை காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 2,400,000 தொகை வட்டி வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது. | இக் காலப்பகுதியானது சபைக்குரிய காலப்பகுதியாகும் இக் காலத்தில் முதல்வர் அவர்களால் பிரதம செயலாளர் அவர்களின் வேண்டுகோளை கேட்கப்பட்ட கடிதம் ஒன்று இக் கோவையில் காணப்படுகின்றது. இதனை வைத்தே இவ் வைப்பிலிடப்பட்டுள்ளது. இக் கோவையானது சபை முடிவுற்றதன் பின்னரே தற்போதைய நிருவாகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | தற்போது நிலவும் வட்டி வீதத்திற்கு ஏற்ப குறித்த தொகையினை வைப்பிலிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டு கல்முனை பொதுச்சந்தை மற்றும் மீன்சந்தை என்பவற்றினை குத்தகைக்கு வழங்கியமை தொடர்பில் குத்தகைக்கு பெற்றவரினால் பிணை முறியானது கூட்டுறவு கிராமிய வங்கியிலிருந்து ரூபா 5,600,000 தொகைக்கு போலியான அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும், அது மாநகர சபையினால் சரிபார்க்கப்படாமையால் ஏற்பட்ட இழப்பிற்கு மாநகர முதல்வரால் KMC/Mayor/Gen/Let ஆம் இலக்க 2022 பெப்ரவரி 22 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பிணை முறிக்குப் பதிலாக கிராமிய கூட்டுறவு வங்கியினுடைய காசோலைகள் கிடைக்கப்பெறும் வரை பொது முகாமையாளரினது தனிப்பட்ட காசோலைகள் பதிலீட்டுக்காக பெறப்பட்டிருந்ததுடன், பொது முகாமையாளரிடமிருந்து பெற்ற ரூபா 2,000,000 பெறுமதியான 04 காசோலைகள் வங்கியில் வைப்புச் செய்யப்படாது மாநகர சபையில் காலங்கடந்த காசோலையாக காணப்பட்டிருந்தது. | பிரதம செயலாளரினால் குழு நியமிக்கப்பட்டு தரவுகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இதற்கான பதில் கிடைக்கப் பெற்றவுடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவைகள் அனைத்தும் அறவிடப்படும். | வருமான அறவீட்டை செய்வதற்கு தடையாக இருந்த சகல தரப்பினர்களிடமிருந்தும் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபைக்கும் தனியார் இறைச்சி கடை உரிமையாளருக்கும் இடையே ஒப்பந்தம் செய்யப்படாமையினால், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஒரு கால்நடைக்கு ரூபா 500 விகிதம் சேகரிக்கப்பட்ட விலங்கறுமனை கட்டணம் ரூபா 4,059,000 தொகையை உறுதிப்படுத்த முடியாதிருந்ததுடன், மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் 2016 முதல் 2020 வரையான காலப்பகுதியில் 42,417 கால்நடைகளுக்கான விலங்கறுமனை கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ரூபா 21,208,500 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | பதில் தரப்படவில்லை. | உரிய முறையில் ஒப்பந்தம் செய்யப்பட்டு விலங்கறுமனை கட்டணம் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, தனியார் விலங்கறுமனை உரிமையாளரினால் ஒரு கால்நடைக்கு ரூபா 1,500 தொகை வருமானமாக அறவிடப்படுகின்ற போதிலும், இவ் நிலையத்தினை பராமரிப்பதற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்கள் காணப்பட்டிருந்தும், மாநகர சபையினால் குறித்த செயற்பாடு மேற்கொள்ளப்படாது ரூபா 500 தொகை மாத்திரமே தனியாரிடமிருந்து பெறப்பட்டு வருகின்றது. இதனால், வருடாந்தம் சராசரியாக ரூபா 8,000,000 தொகை வருமான இழப்பு ஏற்படுகின்றது. | எதிர்வரும் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் விலங்கறுமனை அமைப்பதற்கான நிதியினை மதிப்பீடு செய்து அமைத்து முடிப்பதற்கான முடிவினை எதிர்பார்க்கப்படுகின்றது. | சபையில் காணப்படும் ஆளணியினர்களைக் கொண்டு விரைவாக விலகறுமனை ஒன்றை அமைத்து முறைப்படி வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | கல்முனை பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியிலுள்ள 15 கடையறைகள் மற்றும் பின்புறமாக தற்காலிகமாக அமைக்கப்பட்ட 153 கடையறைகளினை 10 வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்து வாடகைக்கு வழங்குவதற்கு மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்காலிக கடையில் உள்ளவர்களின் ஒத்துழைப்பு வழங்காமையினால் திருத்தம் செய்ய முடியவில்லை. | கடையறைகளினை திருத்தம் செய்து வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான மக்கள் மண்டபம், பஸ் தரிப்பு நிலைய மேல்மாடி கடையறைகள், நற்பிட்டிமுனை பொதுச் சந்தை | சொத்துக்களை பயன்படுத்துவது தொடர்பில் முகாத்துவத் தீரமானங்கள் எடுக்கப்பட்ட | சொத்துக்களை மிக விரைவாக பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேல்மாடி கடையறைகள், பெரிய நீலாவணை பசளை உற்பத்தி நிலையம் மற்றும் இயந்திரங்கள் போன்றவைகள் 10 வருடங்களுக்கு மேலாக பயன்பாடுகளின்றி காணப்பட்டிருந்தது. | பினனர் அதனை பயன்படுத்துவதற்கு மற்றும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வாகனப் பராமரிப்பு மற்றும் கழுவும் நிலைய புனரமைப்பும் அதற்கான உபகரணங்கள் கொள்வனவிற்காக ரூபா 2,264,500 தொகை செலவிடப்பட்டு பூரணப்படுத்தப்பட்டிருந்தும் இதுவரை காலமும் குறித்த நிலையத்தினை பயன்படுத்தி வாகனங்களை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கான பிரதான Compresser இயந்திரமானது 3 Phase மின் வழங்கலுக்குரியதாகும். தற்போது இதனை 3 Phase இணைப்பாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | குறித்த நிலையத்தினை மிக விரைவாக பயன்படுத்தி வாகனங்களை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாநகர சபையினால் 2020 முதல் 2022 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் Syntech நிறுவனத்திடமிருந்து ரூபா 1,071,100 செலவில் வருமான சேகரிப்பிற்கான இலத்திரனியல் மென்பொருள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த வழங்குனரை தெரிவு செய்வதற்கு முன்னர் பெறுகை வழிகாட்டியின் பிரிவு 2.6 இன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது நியமிக்கப்படாமலும், நிறுவனத்தின் முன்னனுபவம், வணிக உரிமப் பத்திரம் மற்றும் வணிகப் பதிவு பத்திரம் போன்றன கவனத்தில் கொள்ளப்படாமலும் தெரிவு செய்யப்பட்டு பெறுவனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏனைய விடயங்களில் கவனம் கொள்ளாமை அப்போதைய நிருவாகத்தினுடைய தவறாகும். தற்பொழுது இது தொடர்பில் மோசடி வழக்கு நீதிமன்றில் இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டு நிறுவனத்தின் முன் அனுபவம் மற்றும் வணிக உரிமைப் பத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டு வழங்குனர்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். |

## 3.6 வாகனங்களின் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபையின் பயன்பாட்டிலுள்ள வாகனங்களின் எரிபொருள் சிக்கனம், வேலையாட்களின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் கழிவகற்றல் செயற்பாடுகளினை துரிதப்படுத்தும் நோக்கில் வாகனக் கண்காணிப்பு முறைமையினை செயற்படுத்துவதற்காக 2020 ஆம் ஆண்டில் 23 வாகனங்களுக்கு ரூபா 455,295 செலவில் ஜீபீஎஸ் (GPS) கருவி பொருத்தப்பட்டிருந்தும், இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலனை அடையக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் இவ் வாகன | கடந்த 2020 ஆம் ஆண்டு GPS கருவி பொருத்தப்பட்டு ஆறு மாத காலத்தினுள் செயற்பாடற்று காணப்பட்டது. இதனை திருத்தம் செய்து மீள பயன்படுத்த முடியாமல் போயிற்று. அக் கால சூழல் தீவிர கொவிட் தொற்றும் மற்றும் அசாதாரண சூழலும் | எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலனை அடையக் கூடிய வகையில் பொருத்தமான ஆலோசனைகள் வழிகாட்டல்கள் மற்றும் தொடர் கண்காணிப்புகளினை யும் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கண்காணிப்பு முறைமை ஆரம்பிக்கப்பட்ட ஆறு மாத காலத்தினுள் செயற்பாடற்று காணப்பட்டிருந்தது. | காணப்பட்ட காலப்பகுதி ஆகும். | |
| (ஆ) | மாநகர சபைக்குச் சொந்தமான 13 வாகனங்களினை திருத்தம்செய்து மீளப்பயன்படுத்துவதற்கு அல்லது பொருத்தமான முறையில் வேறு திணைக்களங்களுக்கு மாற்றுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு குழு அமைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது | திருத்தம்செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது வேறு திணைக்களங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. | சபை நிறைவு பெற்ற பிற்பாடு இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு தற்போது அனைத்து நடவடிக்கைகளும் முகாமைத்துவக் குழுத் தீர்மானத்தின் மூலமே இடம்பெறுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடாத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |